*"நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள். இரட்டிப்பான நன்மையைத் தருவேன். இன்றைக்கே தருவேன்".*

*சகரியா 9:12*

**தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்**

# புனே சேகரம்

**டிசம்பர் - 2020**

**செய்தி மலர் -2**

# பெதஸ்தா C.S.I. ஆலயம்








கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இருளை தொடர்ந்து வெளிச்சம் வரும் என்று எண்ணச் செய்த இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2020ம் ஆண்டு முழுவதும் நம்மை வழி நடத்தி கடைசி மாதமாகிய டிசம்பர் மாதத்தை காண கிருபை செய்த நம் தேவாதி தேவனுக்கு துதி கனம் மகிமையை செலுத்துவோம். டிசம்பர் மாதம் முழுவதும் கர்த்தர் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளை நினைவு கூர்ந்து ஒவ்வொரு நாளும் நன்றி பலிகளைக் ஏறெடுப்போம்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் "**கொரோனா வைரஸ்**" தாக்குதலில் அனேகர் உயிர் இழந்து இருக்கிறார்கள். எத்தனையோ தலைவர்கள், செல்வந்தர்கள் எல்லாம் நம்மை விட்டு சென்றுவிட்டார்கள். ஆனால் நம் ஒவ்வொருவரையும் ஜீவன், சுகம், பெலன் தந்து இதுவரை ஆயூசு நாட்களை கூட்டித்தந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்தி வந்த கிருபைக்காக ஆண்டவரை துதித்து மகிமைப்படுத்த வேண்டும். கொரோனா வைரஸ் தாக்குதல் மூலம் அரசானது பிறப்பித்த முழு ஊரடங்கிலும் நம் ஆண்டவர் நமக்கு உண்ண உணவு, இருப்பிடம் தந்து தேவைகளை சந்தித்த ஆண்டவருக்கு துதி ஸ்தோத்திர பலிகளை ஏறெடுத்து ஆண்டவரை மகிமைப்படுத்த வேண்டும்.

**"நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள். இரட்டிப்பான நன்மையைத் தருவேன். இன்றைக்கே தருவேன்".**

**சகரியா 9:12**

கர்த்தர் இந்த ஆண்டு முழுவதும் வழி நடத்தி கடைசி மாதமாகிய 12வது மாதத்தில் ஆண்டவர் கொடுத்த வாக்கு இரட்டிப்பான நன்மையை தருவேன், இன்றைக்கே தருவேன் என்று வாக்கு பண்ணுகிறார். வேதத்தில் இருந்து யார் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் எவ்வாறு அந்த ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொண்டார்கள். அவ்வாறே நாமும் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்.

எலிசாவின் வாழ்க்கையில் ஆண்டவர் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை (வரங்கள்) பெற்றுக் கொண்டார். அவர் எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பதை தியானிப்போம்.

1. கர்த்தர் மேல் நம்பிக்கை
2. கர்த்தருக்குக் கீழ்படிதல்
3. கர்த்தருடைய விருப்பம்

## 1. கர்த்தர் மேல் நம்பிக்கை (I ராஜாக்கள் 19: 17-21)

ஆபேல் மெகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரன் எலிசா. இவன் தன் வேலைக்காரரோடு 12வது ஏரை ஓட்டிக்கொண்டு இருக்கும்போது எலியா போய் தன் சால்வையை அவன் மேல் போட்டான். எலிசா அதனால் தனக்குக் கிடைத்த அழைப்பை அறிந்து ஜனங்களுக்கு ஒரு விருந்து பண்ணினான். அந்த விருந்தில் உணவுகளை தயாரிப்பதற்கு ஒரு ஏர்மாட்டை பிடித்து அடித்து, ஏரின் மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியை சமைத்து ஜனங்களுக்கு கொடுத்தான். (I ராஜாக்கள் 19:21) இதில் அறிந்து கொள்ள வேண்டிய சத்தியம் என்னவென்றால், எலிசா ஒரு சாதாரண மனிதன் அல்ல அனேக நிலங்களை உடைய நிலக்கிழார் அல்லது ஜமீன் என்று

சொல்லலாம். மேலும் எலிசா விவசாயத்திலும் நன்கு தேறினவன் எவ்வாறு என்றால் ஏர்மாட்டை பிடித்து உழுத எலிசா 12வது ஏர்மாட்டை அதாவது கடைசி ஏர்மாட்டை பிடித்து உழுது கொண்டு இருக்கிறான். கடைசி ஏர்மாட்டை பிடித்து உழுகிறவர்கள் நன்கு தேறினவர்களாக காணப்படுவார்கள். மேலும் ஊழிய அழைப்பை பெற்றவுடன் அப்படியே சென்றுவிடவில்லை. பெற்றோரிடம் அறிவித்து முத்தம் கொடுத்து விடைபெற்று தன் ஜனங்களுக்கு விருந்து கொடுக்கும் போது ஏர் மாட்டை அடித்து ஏரின் மரக்கட்டுகளால் அவைகளின் இறைச்சியை சமைத்து கொடுக்கிறான். எலிசா, எலியாவின் பின் செல்லும் போது ஏர் மாடு மற்றும் ஏரின் மரமுட்டை கொண்டு செல்லவில்லை. எல்லாவற்றையும் விட்டு, இனி தேவன் என்னை நடத்த வல்லவராய் இருக்கிறார். நான் பிடித்து உழுகிற மாடும், மரமுட்டும் இனி தேவையில்லை என்று தன் வாழ்வில் பொருளாதாரத்தை பற்றி சிந்திக்காமல் கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து எலியாவோடு சென்றான். இதே போன்று தான் இயேசுக்கு பின் சென்ற சீஷர்களும் வலைகளை விட்டுவிட்டு பொருளாதாரத்தை பற்றி யோசிக்காமல் இயேசு மீது நம்பிக்கை வைத்து சென்றார்கள். (லூக்கா 5: 1-10)

## 2. கர்த்தருக்கு கீழ்படிதல் (I ராஜாக்கள் 19: 21 பி)

எலிசா ஊழிய அழைப்பை பெற்றவுடன் கர்த்தருக்கு ஊழியம் செய்யவில்லை. கர்த்தருடைய ஊழியத்தில் முதலாவது எலிசா செய்த ஊழியம் பணிவிடை ஊழியம். முதலாவது யாருக்கு ஊழியம் செய்தார் என்று பார்த்தால் எலியாவுக்கு பணிவிடை செய்வதும் கீழ்ப்படிந்தும் நடந்தார். பணிவிடை ஊழியம் தான் ஒரு ஊழியக்காரனை உயர்த்தும். அவ்விதமாக எலிசா செய்த ஊழியமானது குரு சீஷத்துவத்தை குறிப்பதாக இருக்கிறது. குருவிடம் இருந்து சீஷன் எவ்வாறு கற்றுக்

கொள்கிறானோ அவ்விதமாக குருவாகிய எலியாவிடம் இருந்து சீஷனாகிய எலிசா ஊழியத்தை கற்றுக்கொள்கிறார். எலிசா இரட்டிப்பான நன்மையை பெற்றுக் கொள்ள இந்த பணிவிடை பணியும், கீழ்ப்படிதலும் தான் அடிப்படையாக அமைந்தது.

தற்போது வருகிற ஊழியக்காரர்கள் ஊழியத்திற்கு அர்ப்பணித்து வந்தவுடனேயே நான் பெரிய ஊழியக்காரன் என்று தங்களையே மேம்படுத்திக் கொள்கிறார்கள். பணிவிடையை மறந்துபோய் எவ்வளவு வேகமாக வந்தார்களோ அவ்வளவு வேகமாக மறைந்து போய் விடுகிறார்கள். பணிவிடை ஊழியத்தில் தான் அர்ப்பணிப்பு, தாழ்மை மற்றும் மனப்பக்குவம் அடைந்து கர்த்தர் பயன்படுத்திப்படுகிற பாத்திரமாக உருவாக்கப்படுகிறார்கள். அவ்விதமாக கர்த்தரால் பயன்படுத்தப்படுகிற பாத்திரமாக விளங்கியவர் தான் எலிசா. ஊழியத்தில் மிகப்பெரிய ஊழியக்காரர் யார் என்றால் ஆலயத்தில் பணிவிடை செய்கிற கோயில் பணியாளர் தான். ஆலயத்தில் இருந்த சாமுவேல் ஏலிக்கும், ஆலயத்திலும் பணிவிடை செய்ததால் இராஜாக்களை அபிஷேகம் செய்கிற மிகப்பெரிய தீர்க்கதரிசியாக உயர்ந்தது மாத்திரமல்ல, தான் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் தீர்க்கதரிசியாக உயர்த்தினார்.(I சாமுவேல் 3:20)

## 3. கர்த்தருடைய விருப்பம் (II ராஜாக்கள் 2: 1-18)

எலியாவுக்கு பின்சென்று வந்த எலிசா அவருக்கு பின் இரட்டிப்பான வரங்களை பெற்று, எலியா செய்த அற்புதங்களை காட்டிலும் இரண்டு மடங்கு அற்புதங்களை செய்தார். எலியா செய்த அற்புதம் ஏழு, எலிசா செய்த அற்புதம் 14 ஆகும். எலிசா இப்படிப்பட்ட வரங்களை பெற்று எலியாவுக்கு மேலான பணியை செய்தார். இவர் செய்த இந்த மேலான பணிக்கு கர்த்தர் பயன்படுத்த காரணம்

என்னவென்றால் "இவருக்குள் இருந்த "வாஞ்சை" ஆகும். வாஞ்சை என்னவென்றால், எலியாவுக்குள்ளவாக இருந்த வரம் எனக்கு இரண்டு மடங்கு வேண்டும் என்ற கர்த்தருடைய விருப்பத்தை அறிந்து செயல்பட்டதால் எலிசாவுக்கு இரண்டு மடங்கு நன்மையை கொண்டு வந்தது. இதை பெற்றுக்கொள்வதற்கு எத்தனையோ தடைகள் வந்தது. அதையெல்லாம் தாண்டுவதற்கு அவருக்குள் இருந்த வாஞ்சை தான் காரணமாகும்.

II ராஜாக்கள் 2:1-14ல் பார்க்கும்போது எலியா சுழல் காற்றில் யோர்தானில் எடுத்துக்கொள்ளப்படும்போது கில்காலில் இருந்து புறப்படுகிறார். கில்கால் என்பதற்கு "புரட்டிப்போடுதல்" என்பது பொருள் (யோசுவா 5:9). இது தேவனுடைய இரட்சிப்பின் வல்லமைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இது ஒரு மனிதனின் இரட்சிப்பை குறிப்பதாகவும் அமைகிறது. கில்காலில் இருந்து "பெத்தேல்" க்கு வருகிறார்கள். பெத்தேல் என்பதற்கு "வானத்தின் வாசல்" (ஆதி 28: 19,19) ஆகும். தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்கும், எரிகோவுக்கும் வரும்போது அங்கு இருந்த தீர்க்கதரிசிகள் உனக்கு தலைமையாய் இருக்கிற எலியாவை உன்னைவிட்டு கர்த்தர் எடுத்துக்கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா? என்று கூறும்போது தெரியும். நீங்கள் சும்மா இருங்கள் என்று கூறினான்.

அதேபோன்று எலியா ஒவ்வொரு இடமாக செல்லும்போது எலியா எலிசாவிடம் நீ இங்கேயே இரு என்று கூறும்போது நான் உம்மை விடுகிறதில்லை என்று பின் தொடர்ந்து வந்த எலிசா கடைசியில், யோர்தானில் வரும் போது என்னை பின் தொடர்ந்து வருகிறாயே உனக்கு என்ன வேண்டும் என்று கேட்கும்போது, உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரண்டு மடங்கு வேண்டும் என்று கூறுகிறான்.

உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும். இல்லாவிட்டால் கிடையாது என்று கூறுகிறான். பேசிக்கொண்டு நடந்து போகையில் இதோ, அக்கினி ரதமும், அக்கினி குதிரைகளும் இருவரையும் பிரித்து சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். எலியாவின் மேல் இருந்த சால்வை பெற்றுக்கொண்ட எலிசா இரட்டிப்பான வரங்களை பெற்றுக்கொண்டான்.

எனக்கன்பான தேவ பிள்ளைகளே! எலிசா எவ்வாறு இரட்டிப்பான வரங்களை பெற்றுக்கொண்டது போல எலிசா கூட இருந்த கேயாசி நான்கு மடங்கு ஆசீர்வாதத்தை பெற்று இருக்க வேண்டும். ஆனால் உலகத்தை நோக்கி ஐசுரியத்துக்காக சென்றவன் நாகமானின் குஷ்டரோகத்தை பெற்று தேவ மகிமையை இழந்து போனான். ஆனால் எலிசாவுக்குள்ளாக இருந்த பணிவிடையும் கீழ்படிதலும், கர்த்தர் நடத்துவார் என்கிற நம்பிக்கையும் இரட்டிப்பான நன்மையை பெற்றுக் கொடுத்து போல நாமும் எலிசாவை போன்று நடந்து இந்த ஆண்டின் கடைசி மாதத்தில் இரட்டிப்பான நன்மையை பெற்று வருகிற புத்தாண்டு ஆசீர்வாதமாக அமைய நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

# சட்டவாக்கியம் 2021

**அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து : உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ... உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்கிறார்.**

**நியாயாதிபதிகள் 6: 14**

**Praise the Lord**

Dear Beloved in Christ,

I wish you all in Happy Christmas greetings in the name of the Lord Jesus Christ.

Let give thanks and glorify the Lord who lead us mightly in this year. Finally 2020 Not only that let us be thankful unto the Lord for all his goodness. So we praise god and remember all his goodness everyday.

Due to Covid- 19 many of them Passed away from the world. But by the grace of out Lord we are living with good health, Life, strength not only that he provided all our day today basic needs. Give thanks into him.

Let us see this December Month Promise from the Book of Zacharia 9: 12. “Return to your Fortress. You prisoners of hope even non I announce that I will restore twice as much to you.

“I will restore twice as much to you”. Yes, If we return to fortress, surely we will also receive from the God doubly. We too will submit our life into the will of God.

**1. Faith in God**

**2. Obeying his word**

**3. Having desire**

**1. Faith in God**

In the Book of I Kings 19: 19-21. Elijah went from these and found Elisa son of Shaphat. He was plowing with twelve. yoke of oxen, and he himself was driving the twelth pair. After Elisha received a call from Elijah. He went fact, took his yoke of oxen and slaughtered them.

He burned the plowing equipment to cook the meat and gave it to the people and they ate. Then he set out to follow Elijah.

He Believed that my God will meet all my neds. He didn't think about his future and Economical needs. Its shows his faith in god strongly. How great faith he had…!

**2. Obeying his word**

I Kings 19: 21 he got a Gods call through Elijah only. So first he believed God's call and keeping faith into the Lord. Secondly he followed Elijah and started to serve him. What a great mind in him. It shows describing so he followed and served wherever Elijah goes. How humbly he behaved. Today many of the servants of God did not have such a characters like Elisha. Humbleness makes us to become great. The same way we have to obey and do our service to our Higher authorities. It's the way to pleasing our God and become good in ministries. Another example we can see in Samuel life. He also obeyed and did service into Elisha. So made him as a great prophels. Through his announced kings and priest (I Sam: 3: 20).

**3. Having desire**

Elisha followed Elijah, wherever he goes. So he received the anointing and gifts doubly from him. Through Elijah. God did 7 miracles at the same time Elisha 14 miracles did it. Do you know why God did more miracles through Elisha? Because of his longing and desires. God used Elisha more them Elijah. Glory to god. Do you have such a desires to do something greater than others.

Sometimes Elijah asked Elisha not to follow him. “Be there, “ Be here”. But he followed all the places wherever he goes. He don’t have anyother desires/ Just he wants to posses what’s in Elijah. But are the same moment we have to think about Keazis who is the servent of Elisha he had mind of just in money. He received Leprosy in his forehead what a great sad.

So let us have a strong hope in God and obey his comments and having desires in spirit. Then you see How God bless you more than you except. God Bless You. Let the forth coming year 2021 shall be the Blessed year to all.

## 06.12.2020

### திருமறையை படிக்க அழைப்பு

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

சங்கீதம் 119: 105

### Word of God: Light to our path

Your word is a lamp to my feet and a light to my path.

Psalms 119: 105

## 13.12.2020

### வாழ்வில் நம்பிக்கை தரும் இயேசு

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் நமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.

மத்தேயு 1: 21

**Hope for Salvation**

She will bear a son, and you are to name him Jesus, for he will save his people from their sins.

Mathew 1: 21

**20.12.2020**

**கடவுள் நம்மிடம் வருவது பெரும் மகிழ்ச்சி**

சீயொன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு, இதோ நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சகரியா 2: 10

**Rejoice, the Lord is Near**

Sing and rejoice, O daughter Xion for to, I will come and dwell in your midst, says the LORD.

Zechariah 2: 10

**27.12.2020**

**குடும்பம் கடவுளின் பரிசு**

உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக் கொடியைப்போல் இருப்பாள். உன் பிள்ளைகளை உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள்.

சங்கீதம் 128:3

**Family as Gift of God**

Your wife will be like a fruitful vine within your house; your children will be like olive shoots around your table.

Psalms 126: 3

## கிறிஸ்துமஸ் கால நிகழ்ச்சிகள்:

| DATE | TIME | SERVICE |
|---|---|---|
| 06-12-2020 (Sunday) | 9 a.m | Christmas play |
| 13-12-2020 (Sunday) | 9 a.m | Family Carol service |
| 20-12-2020 (Sunday) | 9 a.m | Christmas tree |
| 25-12-2020 (Friday) | 6 a.m | Christmas service |
| 27-12-2020 (Sunday) | 8 a.m | Thanksgiving service |
| 31-12-2020 (Thursday) | 11.30 p.m | New year service |

### இந்த மாதம் பிறந்தநாள் கொண்டாடுபவர்கள்

| Date | Names |
|---|---|
| 02-12-2020 | Master. Justin Johnson |
| 05-12-2020 | Mr. V. Madhavan |
| 06-12-2020 | Mr. R. Anesh |
| 07-12-2020 | Mr. S. Phinehas |
| 09-12-2020 | Mas. Melvin Joel |
| 11-12-2020 | Baby. Jashvi Hadassah |
| 13-12-2020 | Master. Bryce Jabin |
| 14-12-2020 | Mr. Godwin |
| 21-12-2020 | Mr. Edwin Christopher |
| 27-12-2020 | Master. Victor Jebaz |

### இந்த மாதம் திருமண நாளை கொண்டாடுபவர்கள்

| | |
|---|---|
| 15-12-2020 | Mr & Mrs. L. Bala Murali |
| 29-12-2020 | Mr & Mrs. Jeyaprakash |
| 29-12-2020 | Mr & Mrs. S. Phinehas |
| 31-12-2020 | Mr & Mrs. Bestin Louis |

## பிறந்தநாள் மற்றும் திருமண நாள் கொண்டாடுபவர்களுக்கான வாக்குதத்தம்

*உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்.*

*சங்கீதம் 81: 16*

**He should have fed them also with the finest of the wheat: and with honey out of the rock should have satisfied thee.**

**Psalms 81: 16**

**உங்களுக்காக ஜெபிக்கும்**

**Rev. S. சௌந்திரபாண்டியன்**

**சேகர குரு,**

**புனே சேகரம்**

